DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 20/2024 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | மீனாள் |
| Father's Name | : | நாகராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.09.2025

**முதல் விசாரணை:**

நான் மனுவின் 2ம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு முதல் சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 22.11.2021ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை ஆன்லைன் நகல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 23.11.2021ம் தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 30.12.2021ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. ஸ்வர்ணமாலாவின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 1ம் மனுதாரரின் பேங்க் பாஸ்புத்தகம் நகல் **ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. 2ம் மனுதாரரின் பேங்க் பாஸ்புத்தகம் நகல் **ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

9. 1ம் மனுதாரரின் பான் கார்டு நகல் **ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. 2ம் மனுதாரரின் பான் கார்டு நகல் **ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. 12.01.2022ம் தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. 22.11.2021ம் தேதியிட்ட TN 72 N 1537 அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13. ஸ்வர்ணமாலாவின் இறப்புச் சான்றிதழ் நகல் **ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

14. 22.11.2021ம் தேதியிட்ட காவல்துறை வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

15. 22.11.2021ம் தேதியிட்ட பார்வை மகஜர் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வழக்கின் 1ம் மனுதாரர் என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். 1ம் மனுதாரரும் நானும் திருமணம் முடிந்து தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான், என் அம்மா தனியாக வசித்து வருகிறார் என்றால் என் மகனும், என் அம்மாவும் தனியாக வசித்து வருகிறார்கள். என் அம்மாவுன் என் மகன் வசித்து வந்ததற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் அம்மாவிற்கு விபத்து நடந்தபோது வயது சுமார் 75 இருக்குமா என்றால் 69 ஆகும்.

விபத்து நடந்த இடமானது சீரற்ற ரோடு உள்ள பகுதி என்று சொன்னால் சரிதான். அந்த பகுதியில் ஒரு நர்சரி பள்ளி உள்ளது என்றால் சரிதான். அந்த நர்சரி பள்ளி அருகில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான்.

2. அந்த பள்ளி அருகில் எந்தவொரு வாகனம் சென்றாலும் மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் என் அம்மாதான் எந்தவொரு செய்கையும் செய்யாமல் அவர்களாக ஓடும் பேருந்தில் சென்று ஏறினார் என்றால் இல்லை. பொதுவாக பஸ் ஓட்டுநர் பஸ்ஸில் உள்ள பயணிகளை இறக்கிவிட்டு பேருந்தை இயக்கும்போது இருபக்கமும் உள்ள பக்க கண்ணாடிகளை பார்த்துவிட்டுதான் பேருந்தை எடுப்பார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் அம்மா பேருந்து நிற்கும்போதோ அல்லது சைகைகளை செய்திருந்தாலே இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. என் அம்மா விபத்தில் இறக்கும்போது அக்கௌன்டிங் மற்றும் டெய்லர் வேலை பார்த்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் இனிமேல் தாக்கல் செய்கிறேன்.

3. மாதம் ரூ.20 ஆயிரம் சம்பாதித்து வந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என் அம்மாவிற்கு வயது 69 என்பதால்தான் பதட்டத்தில் ஓடும் பேருந்தில் ஏற முயன்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் அம்மாவை நம்பி, நானோ 1ம் மனுதாரரோ அல்லது என் மகனோ அவர்கள் வருமானத்தை நம்பி இல்லை என்றால் என் மகன் மட்டும் என் அம்மாவின் வளர்ப்பில் உள்ளார். என் அம்மா இழப்பினால் எனக்கும், 1ம் மனுதாரருக்கும் எவ்வித பொருளாதார இழப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடுகள் அதிகம் என்பதால் நான் கோரியுள்ள இழப்பீடுகள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| MCOP.No. | : | 20/2024 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கமலக்கண்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.09.2025

**முதல் விசாரணை:**

நான் மனுதாரர், நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. என் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் இறந்தவர் எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் அவர் எனக்கு பழக்கம் எதுவும் கிடையாது, சம்மபவத்தன்று தெரியும். விபத்து நடந்தபோது நான் தெற்கு பகுதியில் நின்றுகொண்டிருந்தேன் என்றால் எனக்கு திசை தெரியவில்லை. விபத்து நடந்தது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் ஆமாம். விபத்து நடந்த பகுதி சீரற்ற பகுதி வேகமாக செல்லமுடியாது என்றால் பேருந்துகள் விரைவாக செல்லக்கூடிய பகுதிதான். விபத்தில்

இறந்தவர் பேருந்தின் எந்த பகுதியில் ஏறினார் என்றால் முன்பக்க படிக்கட்டில் ஏறினார்.

2. பேருந்து நின்ற பிறகுதான் விபத்தில் இறந்தவர் பேருந்தில் ஏறினார் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.